# யா/அளவெட்டி தெற்கு
# அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன்
# பாடசாலை

## பரிசளிப்பு விழா - 2016,2017

## அதிபர் அறிக்கை

# யா/ அளவெட்டி தெற்கு அ.மி.த.க பாடசாலை

## பரிசளிப்பு விழா – 2017

காலம் : 21.11.2017 செவ்வாய்க்கிழமை
நேரம் : பி.ப 2.05 மணி
இடம் : டானியல் பூவர் அரங்கு

தலைமை
திரு.M.C சுதாகரன் (அதிபர்)

பிரதம விருந்தினர்
உயர்திரு.மாணிக்கம் ஆனந்தகுமார் அவர்கள்
(கோட்டக்கல்வி அலுவலர்– தெல்லிப்பளைக்கோட்டம்)

சிறப்பு விருந்தினர்
திருமதி.பிறேமாநிதி அம்பிகைபாலன் அவர்கள்
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் – வழிகாட்டலும் ஆலோசனையும்)

கௌரவ விருந்தினர்கள்
திரு.சின்னத்தம்பி தயாபரன் அவர்கள்
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் J/219)

திருமதி.ராஜினி சுவேந்திரன் அவர்கள்
(பழையமாணவி, ஆசிரியை – யா/அருணோதயக்கல்லூரி)

செல்வி.சர்மிளா மகேந்திரம் அவர்கள்
(அபிவிருத்தி உத்தியோகத்தர் J/219)

திரு.தேவராசா சுஜதாஸ் அவர்கள்
(பழைய மாணவன், அபிவிருத்தி உத்தியோகத்தர் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு – வட மாகாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

# யா/ அளவெட்டி தெற்கு அ.மி.த.க பாடசாலை

**மகுடவாசகம் (Moto)**

"கற்றாங்கு ஒழுகுக"

**தூரநோக்கு (Vision)**

அனைவருக்கும் கல்வி என்ற வகையில் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் நற்பிரஜையாக உருவாக்குவோம்


**செயல் நோக்கு (Mission)**

கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் பாடசாலையிலுள்ள வளங்களின் மூலம் உச்சப்பயன்பாட்டைப் பெறும் வகையில் திட்டமிட்டு சமூகத்துடன் ஒருங்கிணைந்து முறையான பாடவிதானத்துடன் கற்றாங்கு ஒழுகுவதற்குரிய அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்குவோம்.

## எமது ஆசிரியர்கள்



## எமது பாடசாலைக் குடும்பம்



## பாடசாலைத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| நிறுவுநர் | - | டானியல் பூவர் |
| பாடசாலை ஆரம்பம் | - | 04. 07.1831 |
| பாடசாலை இலக்கம் | - | 1013025 |
| தொகை மதிப்பு இலக்கம் | - | 09144 |
| பரீட்சை இலக்கம் | - | 11005 |
| தேர்தல் தொகுதி | - | காங்கேசன்துறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | - | வலி,வடக்கு,தெல்லிப்பளை |
| கிராம சேவையாளர் பிரிவு | - | J/219 அளவெட்டி தெற்கு |
| தரம் | - | III |
| வகுப்புக்கள் | - | 1-5 வரை |
| காணி | - | 5 1/2 |
| கட்டடம் | - | 100" x 20 (40x20) |
| சமையற்கூடம் | - | 20" x 15 |
| மின்வசதி | - | உண்டு |
| குடிநீர் வசதி | - | உண்டு |
| பாடசாலை கணக்கெடுப்பு | - | 01 ஆகஸ்ட் |
| கோட்டம் | - | தெல்லிப்பளை |
| வலயம் | - | வலிகாமம் |
| மாவட்டம் | - | யாழ்ப்பாணம் |
| மாகணம் | - | வடக்கு |
| ஆசிரியர் சம்பளக் கணக்கு | - | இலங்கை வங்கி, சுன்னாகம் 0007501067 |
| பாடசாலை அபிவிருத்திக் கணக்கு | - | மக்கள் வங்கி, சுன்னாகம் 109-1-001-2-0065292 |

## அதிபர் அறிக்கை.

முழுமுதற் கடவுளாகிய விநாயகரை மனதில் இருத்தி எமது ஊரையும் பாடசாலையையும் காக்கின்ற வெளிவயல் ஸ்ரீமுத்துமாரியம்மனின் அருள் வேண்டியும் நிறுவுநர் டானியல் பூவரின் கனவு நனவாக வேண்டியும் 186 ஆண்டு நிறைவில் அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவின் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற உயர்திரு மாணிக்கம் ஆனந்தகுமார் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்து மகிழ்வித்துக் கொண்டிருக்கின்ற திருமதி பிறேமாநிதி அம்பிகை பாலன் அவர்களே, கௌரவ விருந்தினர்களாக அரங்கை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற J/219 அளவெட்டி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திரு.சின்னத்தம்பி தயாபரன் அவர்களே, செல்வி.சர்மிளா மகேந்திரம் அவர்களே, எமது பாடசாலையின் பழைய மாணவர்களான திருமதி.ராஜினி சுவேந்திரன் அவர்களே, திரு.தேவராசா சுஜதாஸ் அவர்களே மற்றும் இவ் விழாவிற்கு வருகை தந்திருக்கின்ற முன்னாள் அதிபர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, பிரதி அதிபர்களே, எமது பாடசாலை ஆசிரியர்களே, பெரியோர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, எமது மாணவச் செல்வங்களே அனைவருக்கும் என் அன்பு கனிந்த இனிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழாவின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தெல்லிப்பளைக் கோட்டக்கல்வி அலுவலர் உயர் திரு.மாணிக்கம் ஆனந்தகுமார் அவர்கள் ஆரம்ப, இடைநிலை கல்வியை கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையிலும் உயர் கல்வியை கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திலும் கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியாக வெளியேறி

தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாவினையும் பூர்த்தி செய்து பிரபல பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றி இலங்கை அதிபர் சேவை தரம் I இனைப் பெற்றுள்ள மனிதநேயமிக்க கல்வியாளராவார். இவர் எமது பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்தமையிட்டு பாடசாலைச் சமூகம் பெருமை அடைகிறது.

இன்றை நிகழ்வின் சிறப்பு விருந்தினராகவருகை தந்து மகிழ்வித்துக் கொண்டிருக்கும் திருமதி.பிறேமாநிதி அம்பிகைபாலன் அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் வழிகாட்டலும் ஆலோசனையும், ஆசிரிய ஆலோசகராக 2005 இருந்து திறம்பட கடமையாற்றி வருகின்றார். விஞ்ஞான ஆசிரியையாக சேவையாற்றி கல்வியியலில் முதுமாணிப் (M.E.D) பட்டத்தினையும் பூர்த்தி செய்துள்ளதோடு வலிகாமம் மாணவர்களை வளப்படுத்துவதிலும் நேர்மையானவராக செயற்படும் சிறப்பு அதிதியை வரவேற்பதில் மகிழ்வடைகின்றோம்.

எம் அழைப்பை ஏற்று கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கின்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.சி.தயாபரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.ம.சர்மிளா ஆகியோரால் எம் பாடசாலை மகிழ்வடைகின்றது. இவர்கள் J/219 அளவெட்டி தெற்கின் இரு தூண்களாக விளங்கி எமது பாடசாலைக் கற்றல் உபகரணங்களை வழங்கல், மாணவர்களின் மதிய உணவிற்கு உதவுதல் போன்ற உதவிகளை நல்மனத்தோடு ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிகழ்வின் கௌரவ விருந்தினராக அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆசிரியை திருமதி.ராஜினி சுவேந்திரன் அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவியாகவும் முன்னாள் ஆசிரியையாகவும் இந்நாள் பெற்றோராகவும் இருந்து எம்முடன் இணைந்திருப்பது மிகவும் மகிழ்வைத் தருகிறது. மேலும் இந் நிகழ்வின் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.தே.சுஜதாஸ் அவர்கள் வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகில் அபிவிருத்தி

உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார். எமது பாடசாலையின் பழைய மாணவனாக பல்வேறு உதவிகளை புரிந்து வரும் இவரை பாடசாலை வரவேற்பதில் பெருமையடைகிறது.

டானியல் பூவர் என்னும் பெரியவரால் 04.07.1831 இல் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை பல்வேறு அதிபர்கள், ஆசிரியர்களின் சேவையினால் 186 ஆண்டுகளைக் கடந்து சிறப்பாக இயங்கி வருகின்றது. எமது பாடசாலையில் தற்போது 05 நிரந்தர ஆசிரியர்களும் 01 தொண்டர் ஆசிரியரும் 29 மாணவச் செல்வங்களுக்கு என்னுடன் இணைந்து மகத்தான சேவையாற்றி வருகின்றார்கள். பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் பூரண ஆதரவுடன் அழகான, அமைதியான, அமைப்பான பாடசாலையாக இயங்கி வருகின்றது. அளவெட்டி தெற்கின் அடையாளமான இக் கலங்கரை விளக்கை பாதுகாப்பது எமது ஊரவர்களின் தலையாய கடமையாகும் என்பதை இத் தருணத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ் வருடம் அயலில் உள்ள இரு பிரபல பாடசாலைகளிலிருந்து 03 மாணவர்கள் எம்முடன் இணைந்தமை உத்வேகத்தைத் தருகின்றது. பாடசாலையினை சமூகத்தினுள் இணைந்துள்ளமை விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எங்கள் பிள்ளைகளை தரம் 05 வரை எங்களிடமே ஒப்படைத்து எங்கள் பாடசாலையை வளர்த்தெடுப்பது எங்களது கடமையாகும்.

### 2017 இல் இடம்பெற்ற சிறப்பு நிலை அடைவுகள்.

* தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 186 வருடத்தில் இல்லாத அளவுக்கு 78% உயர் சித்தி வீதத்தை எமது மாணவர்கள் பெற்றிருக்கின்றனர். கடந்த வருடம் 14% ஆக காணப்பட்ட சித்தி வீதம் ஏறத்தாழ 6மடங்கு பெருக்கமடைந்திருப்பது சிறப்பானதாகும். பரீட்சைக்குத் தோற்றிய 9 மாணவர்களில் 06 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு உயர்வாகவும் 01 மாணவி 70 புள்ளிக்கு உயர்வாகவும் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது. (பகுப்பாய்வு அட்டவணை உள்ளது)

* குடும்ப மட்டப் போட்டிகளில் முதல் நிலைகளைப் பிடித்து கோட்டமட்டப் போட்டிகளுக்குச் சென்றதுடன் அனைத்து பாடசாலை மட்ட, குடும்பமட்டப் போட்டிகளிலும் எம் மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்கு பற்றி வருகின்றனர்.

* மாணவர்களுக்கு இவ் வருடம் புதிய வடிவிலான சொக்ஸ் (காலுறைகள்) அறிமுகப்படுத்தப்பட்டதோடு மாணவத் தலைவர்களுக்கும் வகுப்பு முதல்வர்களுக்கும் சின்னங்களும் சூட்டப்பட்டன.

* வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் போட்டியினை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வாக மாணவர்களுக்கு 'மகிழ்ச்சிகரமான ஓட்ட நிகழ்வு' அறிமுகப்படுத்தப்பட்டது.

* பாடசாலையின் பெயர் பலகைகள் எமது ஊரின் பிரதான இரண்டு நுழைவாயில்களிலும் நிறுவப்பட்டமை.

* உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு கிராம உத்தியோகத்தருடன் இணைந்து மரநடுகைகள் மேற்கொள்ளப்பட்டமை.

* 'மலரும் மொட்டுக்கள்' என்னும் கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடப்பட்டமை.

* தேசிய டெங்கு ஒழிப்பினை முன்னிட்டு பாடசாலை சமூகத்துடன் இணைந்து குழு ஒன்று உருவாக்கப்பட்டு வாராந்தம், மாதாந்தம் சுற்றப்புறச் சூழலை சுத்தப்படுத்தவதில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றமை.

* சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தினை முன்னிட்டு எமது ஊரிலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் அனைவரும் எம்மால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பாக 90 வயதுக்கு மேற்பட்ட 03 முதியவர்களும் பங்குபற்றியிருந்தமை எம்மை மகிழ்வடையச் செய்தது.

* ஒவ்வொரு தவணையும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், தவணை வெளியீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை.

## 2017 இல் கிடைத்த உதவிகள்

1. அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை (NSBS) என்னும் திட்டத்தின் கீழ் ரூபா 280 000 நிதி கல்வித் திணைக்களத் திடமிருந்து கிடைத்தமை இந் நிதியின் கீழ் பாடசாலையின் பழைய மரக்கிறில்கள் நீக்கப்பட்டு கம்பிக் கிறில்கள் பொருத்தப்பட்டன. 40x20 மண்டபத்தில் பக்கக் கூரைகள் திருத்தங்கள் மேற்கொள்ள ப்பட்டதோடு குடிநீர்வசதிகளும் புனரமைக்கப்பட்டன. பாடசாலைக்கு வர்ணப்பூச்சுக்களும் மேற்கொள்ளப்பட்டன.

2. பழைய மாணவர் திரு.V. இராசசேகரம் குடும்பத்தினரால் ரூபா 50000 அன்பளிப்புச் செய்யப்பட்டு ஒலிபெருக்கிச் சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

3. திரு.திருமதி.சத்தியதாசன் மாலா தம்பதியினரால் 2014இல் அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 50000 நிதியிலிருந்து கணணியும் உதிரிப்பாகங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. கணனிக் கொள்வனவுக்கான மேலதிக நிதியாக ரூபா 40000 மனமுவந்து 2017 இல் தந்துள்ளனர்.

4. அளவெட்டி வடக்கு தவளகிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய லண்டன் அறக்கட்டளையினால் நவராத்திரி விழாவுக்காக 2016 இல் ரூபா 9000, 2017 இல் ரூபா 9500 அன்பளிப்புச் செய்யப்பட்டமை.

5. அளவெட்டி சின்னப்பு தத்துவக்காரர்கள் பரிசளிப்பு விழாவுக்கு 2000ரூ இனை வழங்கியுள்ளனர்.

6. செயற்பட்டு மகிழ்வோம். பரிசில்களுக்காக நியூ பாரதி பிரிண்டேர்ஸ் நிறுவனத்தினர் ரூபா 8000 வழங்கியுள்ளனர்.

7.பாடசாலை பெயர்ப் பலகைகள் இரண்டு காந்தன் வெல்டிங் நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

8. ஆசிரியர் தின விழா பெற்றோரின் முழுமையான நிதி ஒத்துழைப்பில் மிகச் சிறப்பாக இடம்பெற்றமை.

9. செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, நிறுவுநர் நாள், முன்னாள் அதிபரின் பிரியாவிடை வைபவம் பரிசளிப்பு விழா நினைவுப் பரிசில்கள் என்பவற்றுக்காக பாடசாலையின் அத்திவாரங்களான

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் தாமாகவே முன்வந்து நிதிப்பங்களிப்பினை வழங்கியுள்ளனர். (விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன)

10. மாணவர்களின் 'மலரும் மொட்டுக்கள்' என்ற கையெழுத்து சஞ்சிகையில் 20 போட்டோ பிரதிகள் மேற்கொண்டு புத்தகமாக்கி நியூபாரதி பிரிண்டேர்ஸ் அன்பளிப்புச் செய்தமை.

11. ஒவ்வொரு தவணையும் அனைத்து மாணவர்களுக்கும் யாழ் பாரதி வெளியீட்டினை இலவசமாக நியூபாரதி பிரிண்டேர்ஸ் நிறுவனத்தினர் வழங்குகின்றனர். வருடந்தோறும் புலமைச்சாறு என்ற புலமைப் பரிசில் புத்தகத்தையும் வழங்குகின்றனர்.

12. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 08 மாணவர்களுக்கும் பழைய மாணவன் திரு.க. உமாநாத் அவர்கள் பதக்கங்களை வழங்குகின்றார்.

13. அளவெட்டி சைவ வாலிபர் சங்கம் மாதந்தோறும் 05 மாணவர்களுக்கு தலா 500ரூ இனை கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்குகின்றது.

14. சமுர்த்தி திணைக்களத்தின் J/219 அளவெட்டி தெற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை.

15. அமெரிக்கன் சிலோன் மிஷன் 200வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அளவெட்டி திருச்சபையால் பாடசாலையின் தேவைக்கென கண்ணாடி அலுமாரி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டன.

16. கீரிமலை கமநலசேவைகள் நிலையத்தினால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

17. வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் பாடசாலையின் தேவைக்கென மடிக் கணணி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

18. World Food நிறுவனத்தினரால் சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

19. திரு.க.முருகதாஸ், திரு.றொஷான், திரு.கி.ஜெய்கீஷன், திரு.காந்தன் ஆகியோரும் அவர்களின் சக ஊழியர்களும் குறைந்த ஊழியத்தில் உச்ச சேவையினை பாடசாலைக்கு வழங்கியுள்ளனர்.

20. திரு.மு.உதயனன் 2017 இல் ஒவ்வொரு தவணையும் இலவசமாக கிணறு துப்பரவு செய்து வழங்கினார்.

21. திரு.ந.கனகராசா தனது உழவு இயந்திரத்தில் இலவசமாக முருகன் கோயிலினால் வழங்கப்பட்ட விறகினை ஏற்றி உதவியுள்ளார்.

22. செல்வி.ம.சர்மிளா, திரு.றஞ்சன் ஆகியோர் இலவசமாக விறகினை வழங்கியுள்ளனர்.

23. திருமதி.து.மயூரன், செல்வி.த.தனுசியா ஆகியோர் எதுவித வேதனமும்மின்றி தொண்டராசிரியராக கடமையாற்றி வருகின்றனர்.

**பாடசாலைக்கான அவசிய தேவைகள்.**

1) ஆசிரியர்கள் மலசலகூடம்
2) சிறுவர் நூலகம்
3) கணனி அறைக்கூடம்
4) தொலைக்காட்சிப் பெட்டி (கற்றல் செயற்பாடுகளுக்கு)
5) பல்லூடக எறியி (Multi Media)
6) சிறுவர் விளையாட்டு முற்றம் (திருத்தியமைக்க வேண்டிய நிலையில் உள்ளது)
7) பாடசாலையின் நிகழ்வுகளுக்கு தேவையான பிளாஸ்ரிக் கதிரைகள்
8) வகுப்புகளுக்கும் அலுவலகத்துக்கும் தேவையான அலுமாரிகள்

# பாடசாலைக் குழுக்களுக்கான செயற்பாடுகள்

## பாடசாலை அபிவிருத்திக் குழு

பாடசாலையின் சக்தி மிக்க ஓர் அமைப்பாக இக்குழு விளங்குகின்றது. இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை இக்குழு உறுப்பினர்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். இக்குழுவின் நிர்வாகக் குழுக் கூட்டமானது மாதாந்தம் ஒரு தடவை நடைபெறுகின்றது. தவணைக்கு ஒரு தடவை பொதுக்கூட்டம் நடைபெறுகின்றது. இக்குழுவின் வலயப் பிரதிநிதியாக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி சு.கந்தகுமார் அவர்கள் கடமையாற்றுகின்றார். பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, இணைப்பாட விதான செயற்பாடுகள், நிதி மேற்பார்வை போன்ற விடயங்களில் தமது பூரணபங்களிப்பினை நல்கிவருகின்றது. இவ்வாண்டு நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டி, சிறுவர்,முதியோர்தின நிகழ்வுகள், உலக ஆசிரியர் தினம், நவராத்திரி விழா, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரிசளிப்பு விழா போன்ற நிகழ்வுகளின் வெற்றிக்கு இக்குழு பூரண பங்காற்றி வருகின்றது.

## அனர்த்த முகாமைத்துவக் குழு

பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் சமூகத்தினரின் பாதுகாப்புத் தொடர்பில் இக்குழு அக்கறை செலுத்துகின்றது. கிராமத்தில் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்களின் போது சமூகத்தில் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்படுகின்றது. பாடசாலை நேரங்களில் அனர்த்தங்கள் இடம்பெறாது இருக்க அனர்த்தங்கள் இடம்பெறக் கூடிய இடங்கள் தொடர்பாக மாணவருக்கு விளக்கம் அளிக்கப்படுகின்றது. அதனை தவிர்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

## கட்டாயக் கல்விக் குழு

மாணவர்களின் வரவு வீதத்தினை அதிகரிக்கவும், பிந்தி வரும் மாணவர்களை இனங்கண்டு ஆலோசனைகள் வழங்கும் பணியினை இக்குழு மேற்கொள்கின்றது. பாடசாலை அமைந்துள்ள கிராமத்தில் வசிக்கும் சிறுவர்களில் பாடசாலைக்கு செல்லாத சிறுவர்களை இனங்கண்டு அவர்களை பொருத்தமான பாடசாலைகளில் சேர்த்து கல்விபயில இக்குழு மாதம் ஒருதடவைகூடி ஆராய்கின்றது. இக்குழுவினரின் இவ்வாண்டுக்கான அறிக்கையின்படி எமது பாடசாலையில் இடைவிலகல்கள் இல்லை முதலாம் தவணையில் மாணவர் வரவு வீதம் தரம் 01 - 82.4% , தரம் 02 - 78.5% , தரம் 03 - 76.9% , தரம் 04 - 80% , தரம் 05 - 93.8% ஆகவும் இரண்டாம் தவணையில் தரம் 01 - 79.4% , தரம் 02 - 63.2% , தரம் 03 - 87.5% , தரம் 04 - 67% , தரம் 05 - 91% காணப்பட்டது. பல்வேறு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் இக்குழுவினர் வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்கின்றனர்.

## உணவுக்குழு

பாடசாலை மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் இக்குழு இயங்கின்றது உலக உணவுத் திட்டத்தின் உதவியுடனும் பெற்றோர்களின் ஆதரவுடனும் இத்திட்டம் உரிய இலக்கினை அடைவதற்கு இக்குழு தமது பங்களிப்பினை நல்கி வருகின்றது. சூழலில் கிடைக்கும் இலைவகைகளைப் பயன்படுத்தி இலைக்கஞ்சி வழங்கும் நடவடிக்கைகளும் இக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாக அமைவதுடன் இதன் மூலம் கற்றல் செயற்பாடுகளும் இடையூறு இன்றி நடைபெற ஏதுவாகின்றது.

## ஆலோசனை வழிகாட்டல்

மாணவர்களின் உடல், உள ரீதியான பாதிப்புக்களில் இருந்து விடுபட தேவையான வழிகாட்டல்களை வழங்கும் நோக்குடன் இக்குழு செயற்படுகின்றது. குடும்பத்தினால் அல்லது சமூகத்தினால் மாணவர்க்கு ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து அவர்களைப் பாதுகாத்து அதன் மூலம் கற்றல் செயற்பாடுகளில் இருந்து அவர்கள் விலகுவதற்கு இடமளிக்காது இக்குழு பாதுகாக்கின்றது. மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு உதவிபுரிதல், மனஅமைதிப்பயிற்சிகள், செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி அதன் மூலம் அவர்களின் அன்றாடச் செயற்பாடுகளை வினைத்திறன் உடையதாக மாற்றியமைக்க இக்குழு உதவிபுரிகின்றது.

## ஒழுக்காற்றுக்குழு

பாடசாலையினுள்ளும், வெளியிலும் மாணவர்களின் செயற்பாடுகளை அவதானித்தலும், பிறள்வாள நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டும் மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை வழங்கி அவர்களை நல்வழிப்படுத்தவும், பாடசாலைக்கு உரிய சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இக்குழு முக்கிய பங்கினை வகிக்கின்றது. மாணவர்கள் சீருடையுடனும், சுத்தமாகவும் வருகை தருவதை இக்குழு உறுதிப்படுத்துகின்றது. இவை தொடர்பாக பெற்றோர்களுடனும் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி பிரச்சனைகளுக்கு தீர்வைக் காண்கின்றது.

## செயற்பட்டு மகிழ்வோம்

பாடசாலை மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் நோக்குடன் இச்செயற்பாட்டுக்குழு தமது பங்களிப்பினை நல்கிவருகின்றது. நாளாந்தம் காலை 7.45 முதல் 8.10 வரை உடற்பயிற்சிச் செயற்பாடுகள் வினைத்திறனுடையதாக இடம்பெறுவதனை இக்குழு மேற்பார்வை செய்கின்றது. வருடம்தோறும் முதலாம் தவணைக் காலப்பகுதியில் பெற்றோர்கள், பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வினை சிறப்பான முறையில் நடாத்துவதற்கும் இக்குழு முக்கிய பங்கினை வகிக்கின்றது. இதன்மூலம் குடும்பமட்ட நிகழ்வுகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

## ஆசிரியர் நல்லுறவு மன்றம்

பாடசாலையில் கடமைபுரியும் ஆசிரியர்களிடத்தே நல்லுறவினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இவ்வாண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஆசிரியர்களின் குடும்பங்களில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவர்களுக்கு தமது ஒத்துழைப்பினை நல்கிவருகின்றது. அத்துடன் பாடசாலைக்கு பல்வேறு வகைகளிலும் உதவிபுரிந்து வரும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் குடும்பத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளிலும் இக்குழுவினர் தமது ஒத்துழைப்பினை நல்கிவருகின்றனர். மேலும் பாடசாலையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் உதவி புரிகின்றனர்.

## பழைமாணவர் சங்கம்

பழையமாணவர் சங்கமானது அதிபர் தலைமையில் இயங்கி வருகின்றது பாடசாலையின் அன்றாடச் செயற்பாடுகளை வினைத்திறன் உடையதாக ஆக்குவதற்கு பழையமாணவர்களின் உதவிகளைப் பெற்று செயற்பாடுகளை முன்னெடுக்க இக்குழு உதவிபுரிகின்றது. முக்கியமாக பாடசாலையில் நடைபெறும் விழாக்கள் மற்றும் முக்கியநிகழ்வுகள் சிறப்புற அமைய பழையமாணவர்கள் சங்கத்தினர் எமக்கு பூரண ஆதரவினை நல்கிவருகின்றனர். நிதிரீதியாகவும், சரீர உதவிகள் வாயிலாகவும் எமக்கு உதவிகள் புரிகின்றனர். ஆரம்பக் கல்விக்கு அடித்தளம் இட்ட இப்பாடசாலையினை மறவாது, பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து செயற்படும் பழையமாணவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பாடசாலை மன்றங்களின் செயற்பாடுகள்

### மாணவர் மன்றம்

மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையிலும் அவர்களின் திறமைகளை ஏனையோர் கண்டுகளிக்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதனை நோக்காகக் கொண்டு இம்மன்றம் ஏற்படுத்தப்பட்டது. மாதாந்தம் மூன்றாம் வாரத்தின் வெள்ளிக்கிழமையன்று இம்மன்றத்தின் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மாணவர்களே இம்மன்றத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளை வகித்து மாதாந்தக் கூட்டங்களினையும் ஒழுங்குபடுத்தி நடாத்தி வருகின்றனர். மாணவர்மன்ற நிகழ்வுகளை கண்டுகளிப்பதற்கு பெற்றோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும் அன்றைய தினமே பெற்றோர் சந்திப்புக்களும் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

## சுற்றாடற் கழகம்

பாடசாலை மற்றும் சுற்றுப்புறச்சூழலை தூய்மையாக வைத்திருக்கும் நோக்குடன் இக்கழகம் செயற்படுகின்றது. நாளாந்தம் பாடசாலையின் சுத்தம், கழிவுப் பொருட்களை உரியவகையில் அகற்றுதல், மாதத்திற்கு ஒரு தடவை சிரமதான செயற்பாடுகளை ஒழுங்கமைத்து நடாத்துதல். பாடசாலையின் தவணை ஆரம்பத்தில் பெற்றோருடன் இணைந்து பாடசாலைச் சூழலினை சுத்தம் செய்து, கழிவுகளை உரிய முறையில் அகற்றுதல் போன்ற செயற்பாடுகள் இக்கழகத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. டெங்கு ஒழிப்பு தொடர்பான பணிகளிலும் இக்குழு ஈடுபட்டு வருகின்றது.

## சுகாதார மன்றம்

மாணவர்களின் சுகாதார நலன்களை பேணும் ஓர் அமைப்பாக இம்மன்றம் விளங்குகின்றது. பொதுச் சுகாதார பரிசோதகரினால் வழங்கப்படும் விற்றமின் குளிசைகள் மற்றும் மருந்துகளை அவரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப மாணவர்களுக்கு இம்மன்றத்தின் ஊடாக வழங்கி அது தொடர்பான ஆவணங்களையும் பேணி வருகின்றது அத்துடன் திடீர் அனர்த்தங்களின் போது மாணவர்களுக்கு வேண்டிய முதலுதவிச் சிகிச்சைகளையும் வழங்குகின்றது. பாடசாலைக்கு வருகைதரும் வைத்தியர்களின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தி தொடர் கண்காணிப்பிலும் இம்மன்றம் ஈடுபடுகின்றது. அத்துடன் சுத்தமான நீர் விநியோகமும், மலசலகூடங்களை சுத்தமாக வைத்திருக்கவும் இம்மன்றம் ஒத்தாசையாக உள்ளது.

## இந்து மன்றம்

மாணவர்களின் நற்பண்புகளை விருத்தி செய்தல், பின்பற்றும் சமயத்தின் மீது நம்பிக்கை வைத்து சமயக் கொள்கைகளை கடைப்பிடித்து வாழக்கூடிய மாணவர் சமூகம் ஒன்றினை நோக்காகக் கொண்டு இம்மன்றம் தமது கடமைகளை முன்னெடுத்து வருகின்றது. தினசரி காலை ஆராதனை, வெள்ளிக் கிழமைகளில் சிவபுராணம் ஓதுதல், தீபாராதனை நிகழ்த்துதல், நற்சிந்தனைகளை ஒழுங்கமைத்தல், சமயக்குரவர் தினங்களை அனுஸ்டித்தல், நவராத்திரி விழா, விஜயதசமி விழா, மற்றும் கலைநிகழ்வுகளை நடாத்துதல், தைப்பொங்கல் விழாவினை ஒழுங்கமைத்து நடாத்துதல் போன்ற இந்து மதத்துடன் தொடர்புபட்ட நிகழ்வுகளை இம்மன்றம் பொறுப்பேற்று சிறப்பான முறையில் நடாத்தி வருகின்றது.

## நன்றி

எமது பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், எனக்கு முழுமையான ஒத்துழைப்பு தருகின்ற எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், நிதிப் பங்களிப்புக்களை வழங்கிய பெருந்தகைகள், நினைவுப் பரிசில்களை வழங்கிய நல்நெஞ்சங்கள், குறிப்பாக கணனிக் கொள்வனவு, ஒலிபெருக்கிக் கொள்வனவு களுக்கு உதவியர்கள், அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பில் என் மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

* * *

## பாடசாலைக்கு வலுவூட்டும் குழுக்கள்

| | பாடசாலை அபிவிருத்திக் குழு | அனர்த்த முகாமைத்துவக் குழு | கட்டாயக் கல்விக் குழு | கொள்வனவுக் குழு | மதிப்பீட்டுக் குழு | உணவுக் குழு |
|---|---|---|---|---|---|---|
| தலைவர் | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திருமதி.ஜெ. இராசநாதன் | திரு.M.C சுதாகரன் (அதிபர்) |
| செயலாளர் | திருமதி.யோ. வஹிதா | திருமதி.து. மயூரன் | திருமதி.இ. உதயகலா | — | — | — |
| பொருளாளர் | திருமதி.உ. இரவீந்திரன் | — | — | — | — | — |
| உறுப்பினர்கள் | திரு.க.சிவ பாலன்<br>திருமதி.ஜெ. இராசநாதன்<br>திருமதி.உ. தயாவதனி<br>திரு.சி.சதீஸ்<br>திருமதி.த. முருகதாஸ்<br>திருமதி.சு. கந்தகுமார் (ஆசிரியஆலோசகர் வலயப்பிரதிநிதி) | திரு.க.சிவபாலன்<br>திருமதி.உ. இரவீந்திரன்<br>செல்வன்.சு. சுரமிதன்<br>செல்வன்.ஜீ. லோஜிதன்<br>செல்வன்.உ. கேசவன்<br>செல்வி.ம. அக்ஷயா<br>செல்வி.ஜெ. ஆதிரா | திருமதி.N.D. தயாளஜெயன்<br>திரு.ந.உமாகாந்தன் (கி.சே. அலுவலர்J/219)<br>திருமதி.ஜெ. வஜிதா<br>திரு.க.முருகதாஸ்<br>திரு.ம.மதுஷன் | திரு.க.சிவ பாலன்<br>திருமதி.உ. இரவீந்திரன் | திருமதி.N.D. தயாளஜெயன்<br>திருமதி.சி. கவிதா | திருமதி.ஜெ. இராசநாதன்<br>திருமதி.க. சிவதரன்<br>சமையல் உதவியாளர்கள்<br>திருமதி.சி. சுஜிதா<br>திருமதி.ஜெ. வஜிதா |

## பாடசாலைக்கு வலுவூட்டும் குழுக்கள்

| | செயற்பட்டு மகிழ்வோம். | ஆசிரியர் நல்லுறவு மன்றம் | ஆலோசனையும் வழிகாட்டலும் | ஒழுக்காற்றுக் குழு | பழைய மாணவர் சங்கம் |
|---|---|---|---|---|---|
| தலைவர் | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திரு.M.C சுதாகரன் (அதிபர்) | திரு.M.C சுதாகரன் (அதிபர்) |
| செயலாளர் | திரு.க.சிவபாலன் | திருமதி.க.சிவதரன் | திருமதி.க.சிவதரன் | | திருமதி.சு.மயூரி |
| பொருளாளர் | திருமதி.உ. இரவீந்திரன் | திருமதி.N.D. தயாளஜெயன் | — | — | திரு.ப.சுதர்சன் |
| உறுப்பினர்கள் | திருமதி.ஜெ. இராசநாதன்<br>திருமதி.க. சிவதரன்<br>திருமதி.N.D. தயாளஜெயன்<br>திரு.து.மயூரன் | திருமதி.ஜெ. இராசநாதன்<br>திரு.க.சிவ பாலன்<br>திருமதி.உ. இரவீந்திரன் | திரு.க.சிவ பாலன்<br>திருமதி.உ. இரவீந்திரன்<br>திருமதி.ஜெ. இராசநாதன்<br>திருமதி.N.D. தயாளஜெயன் | திரு.க.சிவ பாலன்<br>திருமதி.ஜெ. இராசநாதன்<br>திருமதி.உ. இரவீந்திரன்<br>திருமதி.N.D. தயாளஜெயன்<br>திருமதி.க. சிவதரன் | திரு.T.யூட்டனிஸ்<br>திரு.S.டனிஸ்ரன்<br>திரு.T.பிரஷாத்<br>திரு.S.சுகிதா<br>திரு.R.றபிஷன்<br>திருமதி.M.தமயந்தி<br>திருமதி.N.ராகினி<br>திருமதி.J.பத்மநிதி<br>செல்வி.K.ரேணுஜா<br>திருமதி.T.கமலயோதி<br>திரு.S.சசிகரன்<br>ஆலோசகர்கள்<br>திரு.வை.சின்னப்பு |

## பாடசாலையில் செயற்படும் மன்றங்கள்.

| மன்றங்கள் | பொறுப்பாசிரியர் | தலைவர் | செயலாளர் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| மாணவர் மன்றம் | திரு.க.சிவபாலன் | செல்வன்.ஜீ.லோஜிதன் | செல்வி.ம.அக்ஷயா | செல்வன்.சு.சுரமிதன்<br>செல்வன்.யோ.நஸ்மியன்<br>செல்வன்.ஜீ.அகர்மன்<br>செல்வி.ஜெ.ஜஸ்வினா<br>செல்வன்.ச.சம்யுதன் |
| சுற்றாடல் கழகம் | திருமதி.N.D. தயாளஜெயன் | செல்வன்.சு.சுரமிதன் | செல்வி.ஜெ.ஆதிரா | செல்வன்.ப.திவ்யன்<br>செல்வன்.ர.சஜிதாஸ்<br>செல்வி.ச.நிசாளினி |
| சுகாதார மன்றம் | திருமதி.உ. இரவீந்திரன் | செல்வன்.ர.சஜிதாஸ் | செல்வன்.உ.அசான் | செல்வன்.ஜீ.லோஜிதன்<br>செல்வி.ம.அக்ஷயா<br>செல்வி.ஜெ.ஆதிரா |
| இந்து மன்றம் | திருமதி.க.சிவதரன் | செல்வன்.ப.திவ்யன் | செல்வி.ச.நிசாளினி | செல்வன்.உ.கேசவன்<br>செல்வன்.த.ஜதீசன்<br>செல்வி.கோ.குயின்சி<br>செல்வி.ஜெ.விதுஷா |

## பரிசில்கள் பெறுவோர் விபரம்

**01. புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்.( 2017 )**

1. செல்வன்.ஜீவகாந்தன் லோஜிதன் - 133 புள்ளிகள்
2. செல்வன்.ரதீஸ்குமார் சஜீதாஸ் - 133 புள்ளிகள்
3. செல்வன்.சுவேந்திரன் சுரமிதன் - 121 புள்ளிகள்
4. செல்வி.சதீஸ்குமார் நிஷாலினி - 118 புள்ளிகள்
5. செல்வன்.பத்மநாதன் திவ்ஜன் - 109 புள்ளிகள்
6. செல்வி.ஜெய்கீசன் ஆதிரா - 105 புள்ளிகள்

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்.**

**2017**

7. செல்வி.மயூரன் அக்ஷயா - 86 புள்ளிகள்

**2016**

செல்வி. சிவநேசன் அஸ்வீனா - 99 புள்ளிகள்

**02. புலமைப்பரிசில் பரீட்சை விசேட பரிசில்கள். ( 2017 )**

1. செல்வன்.உமாகாந் அசான் - 66 புள்ளிகள்
2. செல்வன்.உதயன் கேசவன் - 61 புள்ளிகள்

**03. குடும்ப மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள்.( 2017 )**

1. ற.டர்மிகா (தரம் - 01 ) - திருக்குறள் மனனம் ( 2ம் இடம் )
2. யோ.நஸ்மியன் (தரம் - 04) - சித்திரப் போட்டி (2ம் இடம் )
3. ற.றபிசன் (தரம் - 03 ) - சித்திரப் போட்டி (2ம் இடம் )
4. ஜெ.ஜஸ்வினா (தரம் - 02 ) - சித்திரப் போட்டி (1ம் இடம் )
5. பண்ணிசை - தரம் 01 குழு 2ம் இடம்
6. சிங்கள வினாடி வினா - குழு

    தரம் 04 - 2ம் இடம்

    தரம் 05 - 3ம் இடம்

இம் மாணவர்கள் கோட்ட மட்டத்திலும் பங்கு பற்றி சிறப்பான அடைவினைப் பெற்றிருந்தனர்.

**04. தவணைப் புள்ளிகளின் அடிப்படையில் பரிசு பெறும் மாணவர் விபரம்.**

## 2017

### தரம் : 01

1. ச.சம்யுதன் : தமிழ், சமயம், சுற்றாடல், கணிதம்
2. ற.டர்மிகா : கணிதம்

### தரம் : 02

1. ஜெ.ஜஸ்வினா : தமிழ், கணிதம், சுற்றாடல்
2. ர.யருக்ஷன் : சமயம்

### தரம் : 03

1. றபிசன் : தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்

### தரம் : 04

1. யோ.நஸ்மியன் : தமிழ், கணிதம், சுற்றாடல்
2. ஜெ.விதூர்சா : சமயம்
3. கோ.குயின்சி : ஆங்கிலம்

### தரம் : 05

1. ம.அக்ஷயா : சமயம்
2. ப.திவ்யன் : தமிழ்
3. சு.சுரமிதன் : கணிதம், சுற்றாடல்
4. ஜீ.லோஜிதன் : ஆங்கிலம்

## 2016

### தரம் : 01

1. ஜெ.ஜஸ்வினா : தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல்

### தரம் : 02

1. ற.றபிசன் : தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல்

**தரம் : 03**

1. யோ.நஸ்மியன் : சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்

**தரம் : 04**

1. ஜீ.லோஜிதன் : தமிழ், சமயம், கணிதம்
2. ப.திவ்ஜன் : சுற்றாடல்
3. சு. சுரமிதன் : ஆங்கிலம்

**தரம் : 05**

1. சி.அஸ்வினா : தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்

**05. நவராத்திரி விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் – 2017**

| போட்டிகள் | பிரிவு – I | பிரிவு – II |
|---|---|---|
| 1. மாலை கட்டுதல் | ம.அபிநாத்<br>ச.சம்யுதன்<br>ஜெ.ஜஸ்வினா | உ.கேசவன்<br>ப.திவ்யன்<br>ர.சஜிதாஸ் |
| 2. பேச்சுப்போட்டி | ஜெ.ஜஸ்வினா | சு.சுரமிதன்<br>ம.அக்சயா<br>ஜீ.லோஜிதன் |
| 3. சகலகலாவல்லி மாலை | ச.சம்யுதன்<br>ற.டர்மிகா<br>ம.அபிநாத் | சு.சுரமிதன்<br>ம.அக்ஷயா<br>ச.நிசாலினி |
| 4. கோலம் போடுதல் | ச.சம்யுதன்<br>ம.அபிநாத்<br>ற.டர்மிகா<br>ஜெ.ஜஸ்வினா | யோ.நஸ்மியன்<br>யோ.குயின்சி<br>ஜெ.ஆதிரா<br>ம.அக்ஷயா |

**06. சிறப்பு நிலைப் பரிசில்கள் – 2017**

1. சிறந்த மாணவன் - செல்வன்.ர.சஜீதாஸ்
2. சிறந்த மாணவி - செல்வி.ம.அக்ஷயா

**புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளி பெற்ற மாணவர்கள்.**

1. ஜீ.லோஜிதன் : 133 புள்ளிகள்
2. ர.சஜீதாஸ் : 133 புள்ளிகள்

**07. விசேட பரிசில் பெறும் மாணவர் விபரம்.**

**தரம் : 01**

1. ம.அபிநாத்
2. ஜீ.ஆவர்ணன்
3. வி.சிந்துஜன்
4. த.யதுர்சன்
5. ற.றஜீவ்

**தரம் : 02**

1. டி.டில்சன்
2. யோ.ஜஸ்மியன்
3. சி.வினித்
4. சு.சுபானி

**தரம் : 03**

1. ஜீ.அகர்மன்

**தரம் : 04**

1. த.ஜதீசன்
2. டி.டில்சியா

**தரம் : 05**

1. ர.சஜீதாஸ்
2. உ.அசான்
3. உ.கேசவன்
4. ஜெ.ஆதிரா

**வரவொழுங்கு மாணவர்கள்.**

| தரம் | 2016 | 2017 |
|---|---|---|
| 01. | ஜெ.ஜஸ்வினா | ச.சம்யுதன் |
| 02. | ஜீ.அகர்மன் | ஜெ.ஜஸ்வினா |
| 03. | த.ஜதீசன் | ஜீ.அகர்மன் |
| 04. | ஜீ.லோஜிதன்<br>ம.அக்ஷயா | யோ.நஸ்மியன் |
| 05. | சி.அஸ்வீனா | ம.அக்ஷயா |

**வகுப்பு முதன்மை (பொதுத்தேர்ச்சி) மாணவர்கள்.**

| தரம் | 2016 | 2017 |
|---|---|---|
| 01. | ஜெ.ஜஸ்வினா | ச.சம்யுதன் |
| 02. | ற.றபிசன் | ஜெ.ஜஸ்வினா |
| 03. | யோ.நஸ்மியன் | ற.றபிசன் |
| 04. | ச.நிசாலினி | கோ.குயின்சி |
| 05. | சி.அஸ்வினா | சு.சுரமிதன் |

**பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள்.**

*1831 - ~~1905~~* - டானியல் பூவர்

*1905 - 1940* - திரு.எம்.டபிள்யூ.தம்பிராசா

*1940 - 1961* - திரு.எஸ்.சித்னத்துரை

*1961 - 1963* - திரு.வி.செல்லப்பா

*1963 - 1971* - திரு.ஜே.ஆர்.நவரத்தினம்

*1971 - 1979* - திரு.நா.மாணிக்கம்

*1979* - திரு.க.செல்லையா

*1979 - 1980* - திரு.சு.பொன்னுத்துரை

*1980 - 1983* - திரு.க.செல்லையா

*1983* - திரு.ஐ.மார்க்கண்டன்

*1983 - 1985* - திரு.க.செல்லையா

*1985* - திரு.செ.இராசசிங்கம்

*1985 - 1986* - திரு.மு.அருளையா

*1986 - 1987* - திரு.வ.நாகராசா

*1987 - 1997* - திரு.நாகலிங்கம்

*1997 - 2002* - திரு.வ.மார்க்கண்டு

*2002 - 2013* - திருமதி.வ.சுதர்சன்

*2013 - 2016* - திரு.த.வாமதேவன்

*2016.10.05* இலிருந்து திரு.M.C சுதாகரன்

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் போக்கு புள்ளிப் பகுப்பாய்வு.

| ஆண்டு | தோற்றியோர் | 70 புள்ளிக்கு மேல் | 100 புள்ளிக்கு மேல் | வெட்டுப் புள்ளிக்கு மேல் | சித்தி பெற்றோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2005 | 14 | 01 | - | - | 01 | 7.14% |
| 2006 | 13 | 01 | 01 | - | 02 | 7.69% |
| 2007 | 09 | 02 | - | - | 02 | 22.2% |
| 2008 | 14 | 02 | - | - | 02 | 14.3% |
| 2009 | 10 | 04 | - | 01 | 05 | 50% |
| 2010 | 16 | 07 | 03 | - | 10 | 62.5% |
| 2011 | 10 | 02 | 01 | - | 03 | 30% |
| 2012 | 10 | 02 | - | - | 02 | 20% |
| 2013 | 07 | - | 03 | - | 03 | 42.8% |
| 2014 | 07 | 03 | 01 | 01 | 05 | 71.4% |
| 2015 | 06 | - | 02 | - | 02 | 33.3% |
| 2016 | 07 | 01 | - | - | 01 | 14.3% |
| **2017** | **09** | **01** | **06** | **-** | **07** | **77.7%** |

## பரிசளிப்பு விழாவுக்கான நினைவுப் பரிசில்களை வழங்கிய நல்நெஞ்சங்கள்.

1. திரு.செல்லர் பரமு நினைவாக

**வழங்குபவர்** : திரு.பரமு வேல்வேந்தன் (பழைய மாணவன்)

ரூபா **10000.00**

2. அமரர்கள் நாராயண பிள்ளை - சிந்தாமணி

அமரர் திருஞானம் - நிர்மலாதேவி ஆகியோரின் நினைவாக

**வழங்குபவர்** : திரு.கந்தசாமி உமாநாத் (பழைய மாணவர்)

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. ரூபா **3000.00**

3. அமரர்கள் வேலுப்பிள்ளை இளையபிள்ளை நினைவாக

**வழங்குபவர்** : திருமதி.மயூரி சுரேஸ்குமார் (பழைய மாணவி)

ரூபா **1000.00**

4. அமரர்கள் கந்தையா பரமேஸ்வரி நினைவாக

**வழங்குபவர்** : திருமதி.வஹீதா யோதீந்திரராஜா (பழைய மாணவி)

ரூபா **1000.00**

5. அமரர்கள் நாகேஸ் நாகேஸ்வரி நினைவாக

**வழங்குபவர்** : திருமதி.காஞ்சனா கோகுலன் (பழைய மாணவி)

ரூபா **1000.00**

6. அமரர் கணபதி தேவராசா நினைவாக

**வழங்குபவர்** : திருமதி ஸ்ரீபிரியா ரவிச்சந்திரன் (பழைய மாணவி)

ரூபா **2000.00**

7. அமரர் அழகுராணி தேவராசா நினைவாக ரூபா **1000.00**

**வழங்குபவர்** : திரு. தேவராசா சுயதாஸ் (பழைய மாணவன்)

8. அமரர் தவமணி கந்தையா நினைவாக ரூபா **1000.00**

**வழங்குபவர்** : திருமதி.தயமந்தி முருகதாஸ் (பழைய மாணவி)

9. அமரர்கள் செல்லையா மாசிலாமணி நினைவாக ரூபா **1000.00**

**வழங்குபவர்** : திரு.க.மகாதேவன் (சமூக நலன்விரும்பி)

10. அமரர் பாலன் கபிலதாசன் நினைவாக ரூபா **1000.00**

**வழங்குபவர்** : திரு.சி.பாலன் (பழைய மாணவன்)

11. அமரர்கள் மார்க்கண்டு நாகம்மா நினைவாக ரூபா **1000.00**

**வழங்குபவர்** : திரு.கனகலிங்கம் ஜெனந்தன் (சமூக நலன்விரும்பி)

12. திரு.சின்னத்தம்பி பாக்கியநாதன் நினைவாக

**வழங்குபவர்** : திருமதி.பகீரதி ஜெகதீஸ்வரன்

(G.S பழைய மாணவி) ரூபா **2000.00**

13. திரு.சிவனடியான் அனுதாஸ் (பழைய மாணவன்)

(விஷ்ணு பல்பொருள் வாணிபம் ) ரூபா **1000.00**

14. திரு.திருமதி.சின்னப்பு அன்னமுத்து நினைவாக ரூபா **500**

**வழங்குபவர்** : திரு.சி.குலசிங்கம் (பழைய மாணவன்)

**பாடசாலை நிகழ்வுகளுக்கு 2017 இல் நிதிப்பங்களிப்பு நல்கிய பெருந்தகைகள்.**

**<u>செயற்பட்டு மகிழ்வோம் விழா</u> 02.02.2017**

| | | |
|---|---|---|
| 1. திருமதி.இ.லதாயினி (நோர்வே) | - | 5000 |
| 2. திருமதி. மு. தமயந்தி | - | 2000 |
| 3. திரு. க. மகாதேவன் | - | 1000 |
| 4. திரு. து. ஜெயரூபன் | - | 1000 |
| 5. திருமதி. ற. கஜரதி | - | 500 |
| 6. திரு. ச. சங்கர் | - | 500 |
| 7. திருமதி. ம. சுகன்யா | - | 500 |
| 8. திரு. சுரேஸ்குமார் | - | 500 |
| 9. திரு. ஜீவநேசன் | - | 500 |
| 10. திரு. யோதீந்திரராஜா | - | 500 |
| 11. திரு. ஜெயக்குமார் | - | 500 |
| 12. திரு. பத்மநாதன் | - | 500 |
| 13. திரு. மா. சுவேந்திரன் | - | 500 |
| 14. திரு. ரஜீவ்குமார் | - | 500 |
| 15. திரு. கி. ஜெய்கீசன் | - | 500 |
| 16. திரு. மு. உதயனன் | - | 500 |
| 17. திருமதி. சுசிலாதேவி | - | 500 |
| 18. திரு. ஜீவகாந்தன் | - | 500 |
| 19. திரு. சி. சதீஸ் | - | 8000 |

(பரிசில்கள் பூரண அனுசரணை நியூ பாரதி நிறுவனத்தினர்)

## நிறுவுநர் நினைவு நாள் 04.07.2017

1. க.சந்திரசேகரம் - 5000
2. N.ராகினி - 500
3. S.தர்சினி - 500
4. ஜெ.பகீரதி - 500
5. த.ராசமலர் - 500
6. தி.கென்சிகா - 200
7. S.மயூரன் - 300
8. J.வஜிதா - 200
9. J.பிரிந்தா - 1000
10. மு.கதிர்காமசாமி - 300
11. மா.சுவேந்திரன் - 500
12. மா.ஜீவநேசன் - 500
13. சர்வேஸ்வரன் - 200
14. சசிகலா - 300
15. காமராசி - 300
16. சின்னராசா - 200
17. கி.ஜெயரதன் - 200
18. கி.ஜெய்கீசன் - 200
19. க.சுகந்தி - 1000
20. க.தர்மராஜா - 1000
21. J.சந்தோஷ் - 500
22. கஜேந்திரன் - 200
23. S.டக்சிகா - 200
24. S.லதாநிதி - 300
25. ம.ஜெயந்தா - 500
26. யோ.வஹிதா - 500
27. பிரேமினி - 100
28. தயாவதனி - 100
29. சிவதர்சினி - 200
30. சி.அனுதாஸ் - 500
31. சுவேந்திரன் - 100
32. விமலாம்பிகை - 100
33. சிறிபாலன் - 100
34. சங்கீதா - 200
35. தம்பிராசா - 300
36. சங்கர் - 500
37. கஜரதி - 300
38. பத்மநிதி - 200
39. றெஜினா - 100
40. மு.தமயந்தி - 500
41. புஸ்பமலர் - 500
42. மதுசன் - 500
43. கனேசலிங்கம் - 500
44. உமாநாத் - 500
45. தீபனா - 100
46. காஞ்சனா - 500

## ஆசிரியர் தின விழா 06.10.2017

1. சி. சங்கர் - 200
2. விஜயகுமார் - 150
3. ம. சுகன்யா - 200
4. திரு.ம.ஜீவநேசன் - 500
5. த. றணேஸ்குமார் - 200
6. ர. கஜரதி - 200
7. டில்சன்-டில்சியா - 200
8. ரவிச்சந்திரன் - 200
9. ஜெயதீபன் - 200
10. பொ.யோதீந்திரராஜா - 200
11. த. தனுராஜன் - 200
12. து. ஜெயரூபன் - 200
13. கி. ஜெய்தீசன் - 200
14. ஆ.கோகுலன் - 325
15. த. சதீஸ்குமார் - 200
16. ஆ. ஜீவகாந்தன் - 200
17. க. உமாகாந் - 200
18. பத்மநாதன் - 200
19. சிவராசா கௌசிகா - 1000
20. மு. உதயனன் - 200

## பரிசளிப்பு விழா 21.11.2017

1. சின்னப்பு நிதியம் - **2000**
2. நினைவுப் பரிசில் வழங்கியோர் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.
3. ஆசிரியர் கழகம் தரம் - 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் சான்றிதழ்களை வழங்குகின்றது.

## ஆசிரியர் தின விழா 06.10.2017

1. சி. சங்கர் - 200
2. விஜயகுமார் - 150
3. ம. சுகன்யா - 200
4. திரு.ம.ஜீவநேசன் - 500
5. த. றணேஸ்குமார் - 200
6. ர. கஜரதி - 200
7. டில்சன்-டில்சியா - 200
8. ரவிச்சந்திரன் - 200
9. ஜெயதீபன் - 200
10. பொ.யோதீந்திரராஜா - 200
11. த. தனுராஜன் - 200
12. து. ஜெயரூபன் - 200
13. கி. ஜெய்தீசன் - 200
14. ஆ.கோகுலன் - 325
15. த. சதீஸ்குமார் - 200
16. ஆ. ஜீவகாந்தன் - 200
17. க. உமாகாந் - 200
18. பத்மநாதன் - 200
19. சிவராசா கௌசிகா - 1000
20. மு. உதயனன் - 200

## பரிசளிப்பு விழா 21.11.2017

1. சின்னப்பு நிதியம் - **2000**
2. நினைவுப் பரிசில் வழங்கியோர் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.
3. ஆசிரியர் கழகம் தரம் - 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் சான்றிதழ்களை வழங்குகின்றது.

## எமது ஆளணியினர்


1. திரு.செல்லத்தம்பி சுதாகரன் - SLPS - III
   B.com (Hons) , PGDE, MA in ECO (Hons)
2. திரு.கந்தையா சிவபாலன் - SLTS - I
   B.A, PGDE
3. திருமதி. ஜெயந்திமலர் இராசநாதன் - SLTS - I
   Primary Trd.
4. திருமதி.நர்மதா டனிஸ்ரன் தயாளஜெயன் - SLTS - 2 - I
   Commerce Trd
5. திருமதி.கவிதா சிவதரன் - SLTS - 2- II
   B.A PGDE
6. திருமதி.உதயகலா இரவீந்திரன் - SLTS - 2-II
   National Dip.in Teaching
7. துஷ்யந்தினி மயூரன் ( *10.01.1996* லிருந்து தொண்டர் ஆசிரியர்)
   G.C.E A/L

**எங்கள் பிள்ளைகளை எங்களிடமே ஒப்படைத்து எங்கள்**
**பாடசாலையை பாதுகாப்போம்.**
**அனைவரும் ஒன்றிணைவோம்.**

**நன்றிகள்**

திரு. M.C சுதாகரன்
(அதிபர் )
யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க பாடசாலை

**தரம் 05 மாணவர்கள்.**



1. செல்வன்.ஜீவகாந்தன் லோஜிதன்
2. செல்வன்.றதீஸ்குமார் சஜிதாஸ்
3. செல்வன்.சுவேந்திரன் சுரமிதன்
4. செல்வி.சதீஸ்குமார் நிஷாலினி
5. செல்வன்.பத்மநாதன் திவ்யன்
6. செல்வி.ஜெய்கீசன் ஆதிரா
7. செல்வி.மயூரன் அக்ஷயா
8. செல்வன்.உமாகாந் அஷான்
9. செல்வன்.உதயன் கேசவன்

## பாடசாலைக் கீதம்

அளவையூர் தெற்கில் அமைந்த எம்
அமெரிக்கன் மிஷன் வித்தியாசாலையே
உளமாந்த அன்பினில் நம்பியே
உமை நாம் வணங்கினோம் தேவியே
(அளவை)

முதலதாய் எம்மூரில் வந்தவா
முந்தையோர் அன்னையாய் நின்றவா
மழலையாம் எமக்குமே அன்னையாய்
வாய்த்த எம் சாலையே வாழ்கவே
(அளவை)

முந்திய வடிவினை நீக்கி நீ
முழுமையாய் வடிவினைப் பெற்றனை
சிந்தனை உடல்நலம் உற்றனை
சீருடன் நீடுழி வாழ்கவே
(அளவை)

அத்தனை அரசினர் தேர்வினிலும்
ஆண்டாண்டு நடைபெறும் விளையாட்டிலும்
எள்துணை இடமேனும் எமக்கென்றே
ஏற்கவே எமக்கருள் புரிகின்றாய்
(அளவை)

எண்ணினை எழுத்தினைத் தருகின்றாய்
ஏதங்கள் அறுத்தெம்மை ஆழ்கின்றாய்
கண்ணிமை காப்பது போலவே
காதலாய் உமைநாம் காத்திடுவோம்.
(அளவை)